


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.12.2025) தலைமைச் செயலகத்தில், அரசு செயலாளர்களாக பதவி உயர்வு பெற்ற திருமதி இரா.லலிதா, அஜய் யாதவ், திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இரா.கண்ணன், முனைவர் ச.நடராஜன், அ.சிவஞானம், இல.நிர்மல்ராஜ், சி.அ.ராமன், ஆ.அண்ணாதுரை ஆகியோர் சந்தித்து, வாழ்த்து பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டத்தில் அமைந்துள்ள சிட்லபாக்கம் ஏரியில் தமிழ்நாடு நீர்வளத்துறையால் ரூ.25 கோடியில் மதிப்பீட்டில் ஏரி சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கழகப் பொருளாளரும், மக்களவைக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, கழக தீர்மனாக் குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## ஜனவரி 5–ஆம் தேதி நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில்

# 10 இலட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்திட வருகை தரும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை,டிச.31-

ஜனவரி 5-ஆம் தேதி நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 10 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்திட வருகை தரும் முதல்வர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குரோம்பேட்டை ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ. கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பத்மா பிரியா, ரஃபி அகம்மது, பரிதி இளம்சுருதி, எஸ்.எம்.கே.அண்ணாதுரை, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதி மாறன், க.அன்புச்செல்வன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயகுமார், எஸ்.இந்திரன், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,



குரோம்பேட்டையில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ.விசுவநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கிருத்திகா தேவி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், கே.எத்திராஜ், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ் பாபு, இரா.பாஸ்கரன், சே.அருள்தேவி, மு.ரஞ்சன், செல்வகுமார், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், டி.கே.கமல கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞான பிரகாசம், சசிகலா, டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தங்கம் வாட்ஸ், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக, முதல் கட்டமாக 10 லட்சம் கல்லூரி மாணவ - மாணவியர்களுக்கு AI பயன்பாட்டுடன் கூடிய, விலையில்லா மடிக்கணினி வழங்கும் மாபெரும் திட்டம் தொடக்க விழா வருகிற ஜனவரி 5-ஆம் தேதி காலை ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு முதல் அமைச்சர் அன்புத்தலைவர் தளபதி அவர்கள் நேரில் வருகைதந்து இம் மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

இம்மாபெரும் தொடக்க விழாவிற்கு வருகை தரும் தமிழக முதல்வர் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 5.1.2026 காலை 9.00 மணியளவில் கண்டோன்மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது என்றும்,

இந்த வரவேற்பில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக் கணக்கில் அணி திரண்டு வந்து கழக கொடியேந்தி உற்சாக வரவேற்பு அளிப்பது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஏகமனதாக முடிவெடுக்கிறது.

தமிழ்புத்தாண்டு - பொங்கல் திருநாளையொட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு விழாக்களில் பங்கேற்க கழக இளைஞர் அணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் இணையதலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7-ஆம் தேதி மாலை நம்முடைய மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

அன்று மாலை 4.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் பெரியார் சிலை அருகில் அமைந்துள்ள திடலில் தமிழ்புத்தாண்டு - பொங்கல்திருநாளையொட்டி ஆலந்தூர் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை துணை முதல்வர் அவர்கள் வழங்குகிறார்.

பிறகு அவர் குரோம்பேட்டைக்கு சென்று, குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில் ரூ.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குரோம்பேட் ராதா நகர் இரயில்வே சுரங்கப் பாதையை திறந்து வைக்கிறார்.

அடுத்து அவர் பல்லாவரம் சந்தை ரோட்டில் நடைபெறும் பொங்கல் விழாவில், பல்லாவரம் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார்.

அதன் பின்னர் ஆலந்தூர் தொகுதி நங்கநல்லூர் பி.வி. நகரில் நடைபெறும் பொங்கல் விழாவில் துணை முதல்வர் அவர்கள் பொது மக்களுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் கொண்டாட வருகை தருகிறார்.

இந்த விழாக்களில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் பெருந்திரளாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக தீர்மானிக்கிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில உள்ள 6 சட்டமனறத் தொகுதிகளில் அடங்கி உள்ள 2,664 பூத்களிலும், பூத்வாரியாக வரைவு வாக்காளர் பட்டியலையும், S.I.R. மூலம் நீக்கப்பட்ட வாக்காளர் பட்டியலையும் சரி பார்த்து முடித்த பின்னர்,

"ஓரணியில் தமிழ்நாடு" திட்டத்தின் கீழ் கழக உறுப்பினர்களாக சேர்த்தவர்களின் பெயர்-வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமல் நீக்கப்பட்டிருந்தால் அவர்களது பெயரையும்,

S.I.R. படிவம் தந்தும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத விடுபட்ட வாக்காளர்களையும் மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து, மொத்தத்தில் ஒவ்வொரு பூத்திலும், நம்முடைய கழக வாக்காளர்கள், கழக ஆதரவு வாக்காளர்கள் உள்ளிட்ட எவர் பெயரும் விடுபடாத வகையில்,

அனைவரையும் படிவம் 6-ல் வாக்காளர்களாக சேர்த்திடும் முக்கி பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்றும்,

வரைவு வாக்காளர் பட்டியலில் இறந்தவர்கள்-இடம் மாறியவர்கள், இடம் பெற்றிருந்தாலும் அல்லது படிவம்-6ல் தவறுதலாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் படிவங்களின் மீது ஆட்சேபனை தெரிவித்து வாக்காளரை நீக்கும் படிவம் 7-லும், பெயர்-முகவரி மாற்றம் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 8-லும் பூர்த்தி செய்து,

வருகிற 3.1.2026 சனிக்கிழமை, 4.1.2026 ஞாயிற்றுக்கிழமை ஆகிய 2 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமில் வழங்கிட வாக்காளர்களுக்கு உதவிட வேண்டும் என்றும்,

இந்த வாய்ப்பை பயன்படுத்தி அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு-கிளைக்கழகச் செயலாளர்கள், BLA-2, BDA, BYO, BLC, உள்ளாட்சி மன்றப்பிரதி நிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் இணைந்து இருகரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்து விடுவது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

S.I.R. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் தரப்பட்ட S.I.R. படிவத்தில் 2 வது அல்லது 3 வது காலத்தில் 2002 அல்லது 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்கள் MAPPING செய்தபோது, பொருந்தாத வாக்காளர்களுக்கு பாகம் வாரியாக அறிவிப்பு நோட்டீஸ் வழங்கிட தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளது.

BLO மூலம் இந்த அறிவிப்பு நோட்டீஸ் பெற்றவர்களை அந்தந்த பாகத்தின் BLA-2 கண்டறிந்து, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 12 ஆவணங்களில் ஏதேனும் ஒரு ஆவணத்தை அந்தந்த பாகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள உதவி வாக்காளர் பதிவு அலுவலர் (AERO) முன்பு நேரில் ஆஜராகி வழங்குவதற்கு,

அந்தந்த பாகத்தின் BLA-2, BLC ஆகியோர் இணைந்து இதற்கு உறுதுணையாக இருந்திட வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டு - பொங்கல் திருநாளாக கொண்டாடிட வேண்டும் என்று நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் - முன்னாள் முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று ஆண்டு தோறும் தமிழ்ப்புத்தாண்டு - பொங்கல் திருவிழாவை கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் பெரும் திருவிழாவாக கொண்டாடி மகிழ்ந்து வருகிறோம்.

அந்த வகையில் இந்த ஆண்டும் தமிழ்ப்புத்தாண்டு - பொங்கல் திருவிழாவை மிகவும் - எழுச்சியுடன் பெரும் திருவிழாவாக கொண்டாடிடுவது என்றும்,

தமிழ் பாராம்பரிய விளையாட்டுகளான கபடி போட்டி, சிலம்பம் போட்டி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகளையும், கோலப் போட்டியையும் சிறப்பான முறையில் நடத்திட வேண்டும் என்றும்,

பொங்கல் திருநாளை முன்னிட்டு நம்முடைய மாவட்டத்தில் உள்ள மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகத்தின் சார்பில் வார்டு - கிளை கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், ஏழை - எளிய மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் புத்தாடைகளை வழங்கிடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



கர்நாடக மாநில கழகம் சார்பில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் பங்கேற்று நல உதவிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாநில கழக பொறுப்பாளர் மொ. பெரியசாமி தலைமை வகித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நா. இராமசாமி, கே. தட்சிணாமூர்த்தி, ஏ.டி. ஆனந்தராஜ், ஆர். அன்பழகன், கே. கருணாநிதி, சற்குணம், முருகுமணி, போர் முரசு கதிரவன், டி. சிவமலை, செ. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் 'மதி உணவுத் திருவிழா'வின் நிறைவு விழா!

## 28.12.2025 அன்று நடைபெற்றது!

சென்னை, டிச.31-

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேலும் வளப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட, மதி அங்காடி, மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்ற உணவுத் திருவிழாக்களுக்கு பொதுமக்கள் தந்த அபரிமிதமான ஆதரவைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், 21.12.2025 அன்று சென்னை, பெசன்ட் நகர் கடற்கரையில் மதி உணவுத்திருவிழாவினைத் தொடக்கி வைத்தார்.

மதி உணவுத் திருவிழாவில், அமைக்கப்பட்டிருந்த 50 அரங்குகளில், 70 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 150 மகளிர் உணவு வகைகளை உடனடியாக சமைத்து, சுகாதாரமான முறையில் பரிமாறியதுடன், பல்வேறு வகையான உணவுப் பொருட்களையும் விற்பனை செய்தனர்.

சென்னை மக்களின் அபரிமிதமான வரவேற்பின் காரணமாகவும், பள்ளி அரையாண்டுத் தேர்வு விடுமுறை, கிறிஸ்துமஸ் ஆகியவற்றை முன்னிட்டும் பெசன்ட் நகர் கடற்கரை மதி உணவுத் திருவிழா 28.12.2025 வரை நீட்டிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஆதரவுடன் 21.12.2025 முதல் 28.12.2025 வரை 8 நாட்கள் வெற்றித் திருவிழாவாக நடைபெற்ற இந்த உணவுத் திருவிழாவிற்கு, சுமார் 4.5 இலட்சம் பொதுமக்கள் வருகை தந்து, 2 கோடியே 56 இலட்சத்து 42 ஆயிரத்து 775 ரூபாய் மதிப்பிலான சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் ஆயத்த உணவுகளை வாங்கிச் சென்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

மதி உணவுத் திருவிழாவிற்கு பெருமளவில் வருகை தந்து, சுய உதவிக் குழுக்கள் தயாரித்த உணவுப் பொருட்களை சுவைத்தும், வாங்கியும் சென்று அபரிமிதமான ஆதரவை நல்கிய அனைவருக்கும் சுய உதவிக் குழுக்களின் மகளிர் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சென்னை மக்களின் மனதைக் கவர்ந்த, மதி உணவுத் திருவிழாவின் நிறைவு விழா 28.12.2025 அன்று சென்னை, பெசண்ட் நகர் கடற்கரையில் அமைந்துள்ள உணவுத் திருவிழா அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஆர்.வி.ஷஜீவனா தலைமையில், மதி உணவுத் திருவிழாவினை வெற்றிகரமாக்கிட செயல்பட்ட, மகளிர் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவர்கள், பணியாளர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்கள், நகர்ப்புர வாழ்வாதார மையங்களின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும் மதி உணவுத் திருவிழாவின் வெற்றிக்காக செயல்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், காவல்துறை, போக்குவரத்துக் காவல் துறை, தீயணைப்புத் துறை, சுகாதாரத் துறை, மின்சார வாரியம் ஆகியவற்றின் அலுவலர்களுக்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மதி உணவுத் திருவிழா அரங்கில் 31.5 டன் ஈரமான மற்றும் உலர்ந்த குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு, அவற்றில் 84 சதவிகித குப்பைகள் மறுசுழற்சி செய்திட அனுப்பப்பட்டுள்ளன. குப்பைகளை உடனுக்குடன் அகற்றி, விழா அரங்கினையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாகப் பராமரித்து, சுத்தத்தையும், சுகாதாரத்தையும் காத்திட்ட தூய்மைப் பணியாளர்களின் சிறப்பான சேவையினைப் பாராட்டி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், மதி உணவுத் திருவிழா அரங்கில் தினசரி சமையலுக்குப் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்கள் மீண்டும் சமையலுக்குப் பயன்படுத்தப்படாமல் உடனுக்குடன் சேகரிக்கப்பட்டது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட 200 லிட்டர் எண்ணெய்கள் விற்பனை செய்யப்பட்டதில் கிடைத்த 14,000/ ரூபாய் சுய உதவிக் குழு மகளிருக்கே வழங்கப்பட்டது.

உணவுத் திருவிழாவில் நடைபெற்ற உணவு வகைகளின் தரத்தை மேம்படுத்துவது, சுகாதாரமான முறையில் பரிமாறுவது, விற்பனை நுணுக்கங்கள், சந்தைப்படுத்துதலில் உள்ள சவால்களை எவ்வாறு களைவது போன்ற பயிற்சிகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மகளிரின் மகிழ்ச்சியே மாநிலத்தின் வளர்ச்சி என்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும்டு துணை முதலமைச்சர் அவர்களின் சாதனைகளுக்கு மேலும் ஒரு வெற்றி மகுடமாக அமைந்துள்ளது சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் சிறப்புற நடைபெற்ற மதி உணவுத் திருவிழா.




மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, 151வது வட்டத்தில், பாகம் – 315, 316 மற்றும் 349–ல் என்வாக்குச்சாவடி வெற்றிவாகுச்சாவடி தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் நடைபெற்ற பிரச்சார பரப்புரை கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ச. சங்கர் கணேஸ் எம்.சி திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பான திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



அண்ணாநகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 101அ வட்டத்திற்குட்பட்ட பாகம் 89,90,91,92,93 ஆகிய எண்களில் வட்டக் கழக செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன். அண்ணாநகர் தொகுதி ஒருங்கிணைப்பாளர் வே.கௌதமன், வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் மற்றும் வட்ட பாக ஒருங்கிணைப்பாளர் ச.அசோக்குமார் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் முன்னோடிகள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.